சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.12.04.2023
OS.NO. 29/2021
PW2: கார்த்திக்ராஜா

**குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு உறவினரோ நண்பரோ கிடையாது, தெரிந்தவர் மட்டுமே. கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு முன்பாக வாதிக்கும் பிரதிவாதிக்கும் உள்ள வரவு செலவு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் அதை எழுதப்பட்ட தேதியில் ரூ. 2 லட்சத்தி 50 ஆயிரம் கொடுத்தது போல் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அன்றைய தேதியில் ரூ. 1 லட்சத்தி 50 ஆயிரம் மட்டும் தான் கொடுக்கப்பட்டது. அதற்கு முன்பாகவே பைரோஜா ரூ. 1 லட்சம் வாங்கியுள்ளதாக கூறினார். பைரோஜாவிற்கு வேறு பெயர் எதுவும் உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் எல்.ஐ.சி ஏஜண்டாக உள்ளேன். வாதி கடனுறுதி சீட்டின் சாட்சி கையொப்பம் செய்ய அழைத்தாரா என்றால் எல்.ஐ.சி ஏஜண்ட் என்ற முறையில் தாயுமான் லிங்கம் பட்டறைக்கு வழக்கமாக செல்வேன், அன்றைய தினம் ஏதார்த்தமாக சென்ற போது தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. பிரதிவாதி பாத்திமா வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் நானும் வாதியும் கூட்டு சேர்ந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

பிரதிவாதி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் என்றால் சரிதான். இன்று ஆஜராகியுள்ள பிரதிவாதியின் பெயர் பைரோஜா தான். குறுக்கு விசாரணை இல்லை.

/Signed/
கார்த்திக்ராஜா

/Signed /
K.இன்பகார்த்திக்,B.A., L.L.M.,
சார்பு நீதிபதி, இலால்குடி